செய்தி வெளியீடு எண்.808 நாள்.29.9.2008

# 1500 கோடி ரூபாய் முதலீட்டில் புதிய தொழிற்சாலைகள் !
# ஹர்ஷா குழும தொழில் நிறுவனத்துடன்
# தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் !

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் கையெழுத்தானது !

அயல்நாடுகளில் வாழும் இந்திய தொழில் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஹர்ஷா குழும தொழில் நிறுவனங்கள், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. எண்ணெய் மற்றும் எரிவாயு தொழில்களில் சிறந்து விளங்குவதுடன், இத்தொழில்களுக்கான சாதனங்களைத் தயாரிப்பதிலும், கண்ணாடி உற்பத்தித் தொழிலிலும் குறிப்பிடத்தக்க சிறப்புத் திறன்களைக் கொண்டுள்ள ஹர்ஷா குழும தொழில் நிறுவனம், வளைகுடாப் பகுதியில் ஏற்கனவே இரண்டு கண்ணாடித் தொழிற்சாலைகளையும் அமைத்துள்ளது. இத்தகைய தொழில் அனுபவங்களைக் கொண்டுள்ள இந்த தொழில் நிறுவனம் தமிழகத்தில் பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழிற் பூங்காவில் எண்ணெய் மற்றும் வாயு துரப்பண இயந்திரத் தொழிற்சாலையையும், திருப்பெரும்புதூர் சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தையும், கும்மிடிப்பூண்டி அருகில் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலையையும் தனது இந்திய துணை நிறுவனங்கள் மூலமாக அமைத்திடத் திட்டமிட்டுள்ளது.

மொத்தம் 1500 கோடி ரூபாய் முதலீட்டில் 1500 பேருக்கு நேரடியாகவும், மேலும் பலருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கிட வகைசெய்யும் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (29.9.2008) நடைபெற்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பாக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு எம்.எஃப்.பாரூகி, இ.ஆ.ப., அவர்களும், ஹர்ஷா எக்சிடோ இஞ்சினீயரிங் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பாபுராஜ் தன்ராஜ் அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர், திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (SIPCOT) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.என். கோவிந்தன், தொழில் துறை சிறப்புச் செயலாளர் திரு. தீரஜ் குமார், தொழில் வழிகாட்டுதல் மையத்தின் இயக்குநர் திரு.எம். வேல்முருகன், ஹர்ஷா குழும தொழில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. அருண் மிராண்டா, திரு. கிறிஸ்து குமார், ஹர்ஷா குழும தொழில் நிறுவனங்களின் மூத்த அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.